| 03. | நிந்துஷன் இலங்கநாதன் | தமிழர் கலைகளில் தமிழிசை | நிறைவு | திறன் | ********* | ******* | ******* |
| 04. | சரண்யா சிவபாதசுந்தரம் | தமிழர் கலைகளில் தமிழிசை | பங்குபற்றினார் | மிகுதிறன் | ********* | ******* | நிறைவு |
| 05. | டாருகா சுபாஸ்கரன் | தமிழர் கலைகளில் தமிழிசை | அதிதிறன் | அதிதிறன் | ********* | 03rd | திறன் |
| 06. | சோபிகா சுபாஸ்கரன் | தமிழர் கலைகளில் தமிழிசை | மிகுதிறன் | மிகுதிறன் | ********* | ******* | நிறைவு |
| 07. | மதுசா திருச்செந்தூர் | தமிழர் கலைகளில் தமிழிசை | பங்குபற்றினார் | திறன் | ********* | ******* | நிறைவு |
| 08. | ஷடோன் பாலமனோகரன் | தமிழர் கலைகளில் தமிழிசை | திறன் | திறன் | ********* | ******* | தேர்ச்சி |

| இல | பிள்ளையின் முழுப் பெயர் | ஒப்படை | சொல்வது எழுதுதல் | வாசித்தல் | திருக்குறள் | பேச்சு | கட்டுரை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | லிஷானா சற்குணராஜா | ............ | நிறைவு | மிகுதிறன் | ......... | ........ | நிறைவு |
| 02. | ஜக்லின் திருலோகநாதன் | பாண்டுகாப்பயன் | திறன் | மிகுதிறன் | 01st | 01st | மிகுதிறன் |
| 03. | துஷானாந் உதயராஜா | பாண்டுகாப்பயன் | தேர்ச்சி | திறன் | ......... | ........ | தேர்ச்சி |
| 04. | விபுசன் லோகநாதன் | எல்லாளன் | பங்கு பற்றினார் | மிகுதிறன் | ......... | 03rd | ........ |
| 05. | மெனுஜா பிரபாகரன் | விஜயபாகு | நிறைவு | மிகுதிறன் | 01st | 01st | மிகுதிறன் |
| 06. | ரமியா பிரதீபன் | ............ | மிகுதிறன் | மிகுதிறன் | ......... | ........ | அதிதிறன் |

| இல | பிள்ளையின் முழுப் பெயர் | ஒப்படை | சொல்வது எழுதுதல் | வாசித்தல் | திருக் குறள் | பேச்சு | கட்டுரை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | லெஸ்லின் லவனியா அருட்சந்திரன் | புலன் பெயர் நாடுகளில் தமிழர் பண்பாடு | அதிதிறன் | திறன் | ........ | 01st | அதி திறன் |
| 02. | பிரியா மோகனராஜா | புலன் பெயர் நாடுகளில் தமிழர் பண்பாடு | திறன் | உயர் தேர்ச்சி | 01st | 01st | நிறைவு |
| 03. | லிதியா சுருதி சிங்கராஜா | ............... | தேர்ச்சி | உயர் தேர்ச்சி | ........ | .... | திறன் |
| 04. | மதுசான் சத்தியமூர்த்தி | புலன் பெயர் நாடுகளில் தமிழர் பண்பாடு | பங்குபற்றினார் | நிறைவு | ........ | .... | திறன் |

| இல | பிள்ளையின் முழுப் பெயர் | ஒப்படை | சொல்வது எழுதுதல் | வாசித்தல் | திருக்குறள் | பேச்சு | கட்டுரை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | பிரகாஷ் மோகனராஜா | தமிழரின் தொன்மையும் வரலாறும் | அதிதிறன் | மிகுதிறன் | 01st | 03rd | மிகு திறன் |

| இல | பிள்ளையின் முழுப் பெயர் | வளர் தமிழ் | தகுதி நிலை |
|---|---|---|---|
| 01. | ஆன்சிபோ ஜெயந்தகுமார் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 02. | றிஷானா வசந்தன் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 03. | கபிசன் சிவசுதன் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 04. | அஷ்விகா சுரேஸ்குமார் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 05. | மேகனா பிரபாகரன் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 06. | கிஷோர் யோகேஸ்வரன் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 07. | அருண் அருளானந்தன் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 08. | ஷரன் ரஞ்சித்குமார் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 09. | ஆரணி பிரமேந்திரன் | 01 | அதிதிறன் EXCELLENT |
| 10. | லதீஷான் அருமைநாயகம் | 02 | அதிதிறன் EXCELLENT |
| 11. | ரோஷினி முகந்தன் | 02 | அதிதிறன் EXCELLENT |
| 12. | ஹரினி நாகராஜா | 02 | அதிதிறன் EXCELLENT |
| 13. | நிருஜா சுதாகரன் | 02 | அதிதிறன் EXCELLENT |
| 14. | துளசி யோகேஸ்வரன் | 02 | அதிதிறன் EXCELLENT |
| 15. | லக் ஷனியா நிதிகரன் | 02 | அதிதிறன் EXCELLENT |
| 16. | நீனுஜா நாராயணசாமி | 02 | அதிதிறன் EXCELLENT |
| 17. | சரன் லேடியா கிருஸ்டி | 02 | அதிதிறன் EXCELLENT |
| 18. | ஆராதனா ஜெயபாஸ்கரன் | 03 | அதிதிறன் EXCELLENT |
| 19. | பிரவீனா சுரேஸ் | 03 | அதிதிறன் EXCELLENT |
| 20. | சோபிதா ரவிதாஸ் | 05 | அதிதிறன் EXCELLENT |
| 21. | கௌசல்யா ஜனார்த்தனன் | 05 | அதிதிறன் EXCELLENT |

விதுஜன் பாக்கியநாதன்
வளர்தமிழ் 6
10/06/2017

## கோடைகாலம்

இலைதுளிர் காலம் முடிந்தவுடன் கோடை காலம் ஆரம்பமாகும். ஆனி ஆடி, ஆவணி மாதங்களில் கோடை காலம். காலையில் பறவைகளின் ஒலிகள் கேட்கும். அதைக் கேட்க இனிமையாக இருக்கும். கோடைகாலத்தில் அதிகாலையில் கதிரவன் உதிக்கும். பகல்பொழுது கூடுதலாகவும். இரவுப் பொழுது குறைவாகவும் இருக்கும். இக்காலத்தில் மரம், செடி, கொடிகள் வளர்ந்து பசுமையாகக் காட்சியளிக்கும். கோடைகாலத்தில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும்.

கோடைகாலம் தொடங்கியவுடன் மக்கள் கொண்டாட்டங்களை நடத்துவர். திருமணங்கள், பிறந்தநாள் கொண்டாட்டம், விளையாட்டுப் போட்டிகள், ஒன்றுகூடல் போன்றன நடைபெறும். கோவில்களில் திருவிழாக்கள் இடம்பெற ஆரம்பிக்கும்.

இக்காலத்தில் பாடசாலைகள் நீண்ட-கால விடுமுறைகள் விடும். பாடசாலைகள் விடுமுறை விடுவதால் மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்வார்கள். சிலர் உள்நாட்டில் புகழ் பெற்ற இடங்களைச் சுற்றிப் பார்ப்பர்.

பகற்பொழுது கூடுதலாகவும் வெளிச்சமாகவும் இருப்பதால் இக்காலத்தில் மக்கள் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவர். எனக்கு மிகவும் பிடித்த காலம் கோடைகாலமாகும்.

அஞ்சலி முகிலழகன்
10/6/17
வகுப்பு 6

# கோடை காலம்

இலை துளிர் காலம், கோடை காலத்துக்கு முதலாக வருகின்றது. கோடை காலத்தில் கடற்கரைக்கு செல்லலாம், மணல் வீட்டை கட்டலாம், பறவைகள் பார்க்கலாம், கதிரவன் வெளிச்சமும் தருவார், கோடை காலத்தில் நாங்கள் செய்கின்றோம். இலை துளிர் காலம் முடிந்தவுடன் வருவது கோடை காலம் ஆகும். ஆனி, ஆடி, ஆவணி மாதங்கள் கோடை காலமாகும். காலையில் பறவைகளின் ஒலிகள் கேட்கும். அது கேட்க இனிமையாக இருக்கும்.

கோடை காலத்தில் விடுமுறையில் வெளி நாடுகளுக்கு பயணம் செல்வோம். கோடை காலத்தில் சுற்றுலாவுக்கும் செல்வோம். பெண்கள் கோடை காலத்தில் பாவாடைகள் அணிவார். ஆண்கள் கோடை காலத்தில் காற்சட்டை அணிவார்கள். கோடை காலத்தில் கடற்கரைக்கு சென்று, மணல் வீடு கட்டி, மகிழ்ச்சியாக எல்லாரும் சேர்ந்து விளையாடுவோம்.

கோடை காலத்தில் உணவுகள் உண்ணலாம். கோடை காலத்தில் விளையாட்டு போட்டிகளும் நடைபெறும், இது உடல் நலத்துக்கு நன்மை தரும். கோடை காலம் எனக்கு விருப்பமான காலம். நான் கோடை காலத்தில் மகிழ்ச்சியாக இருப்பேன்.

V-6
10/06/2017

கோடைகாலம்

கோடைகாலம் இப்பொழுது வந்துவிட்டது. ~~அ~~ பிள்ளைகள் அவர்கள் அப்பா அம்மாவுடன் வெளியே செல்வார்கள். அல்லது அவர்களின் உறவினர்களோடு சேர்ந்து இருப்பார்கள். பிள்ளைகள் தமிழ் நாட்டுக்கும் தமிழ் இலங்கைக்குச் செல்வார்கள்.

கோடைகாலத்தில் என் பிறந்தநாள் வரும். அப்பொது என் நண்பர்களும் என் உறவினர்களும் வீட்டுக்கு வருவார்கள். எனக்கு பரிசுகள் தருவார்கள். எனக்கு, அக்கா, அம்மா, அப்பா வெளியே செல்வார்கள். நாங்கள் உறவினர்களோடு கடற்கரைக்குச் செல்வோம். அங்கே நானும் அக்காவும் மணல் வீடு கட்டி விளையாடுவோம்.

கோடைகாலத்தில் எமது கோயில் தேர் வரும். நாங்கள் குடும்பத்தோடு செல்வோம். அப்பாவும், மாமாவும் தேரை சேர்ந்து இழுப்பார்கள். நான் எமது நண்பரகளோடு சேர்ந்து சாமியை கும்பிடுவேன். நாங்கள் உறவினர்களோடு நாங்கள் நண்பரின் வீட்டுக்கு செல்வோம்.

ஆனால் இப்பொது கோடைகாலம் முடிவுக்கு வந்துவிட்டது. நான் இப்பொது பள்ளிக்கு செல்வேன். நாங்கள் இப்பொழுது படிக்க வேண்டும். கோடைகாலம் ஒரு இனிமையான காலமாகும்.

பிரியங்கா பரந்தாமன்
ஆண்டு 6
10/06/17

கோடை காலம்

காலையில் கதிரவன் எழும்பி வெளிச்சம் எங்களுக்கு தருவான். இலை துளிர் காலம் முடிந்தவுடன் கோடைகாலம் வரும். ஆனி, ஆடி, ஆவணி மாதங்கள் கோடை காலம் தொடங்கும். காலையில் பறவைகள் ஒலிகள் கேட்கும். அதை கேட்க இனிமையாக இருக்கும். சூரியன் வெளிச்சமாக இருக்கும்.

வெப்பம் கூடுதலாக காணப்படும். பச்சை மரங்கள் இனிப்பு பழங்கள் தெரியும். தளிர் வாணம் முகத்தில் வீசும். பள்ளி விடுமறை தொடங்கி, குடும்பத்தோடு வெளி நாடு பயணம் விண்ணூர்தில் செல்வோம். நாங்கள் கடற்கரைக்கு சென்று, மணல் வீடு கட்டி, விளையாடுவோம். நிறைய உணவுகள் உண்போம்.

நான் பூங்காவுக்கு சென்றேன். அங்கே அழகான மலர்களும் பூக்களும் கண்டேன். கோடைகாலத்தில், நான் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெற்றேன். நான் மகிழ்ச்சியாக சிரித்தேன். கோடைகாலத்தில் நிறைய கொண்டாட்டங்கள் நடைபெறும். திருவிழாக்கள், பிறந்தநாள்கள் நடைபெறும்.

சோபிதா ரவிதாஸ்
வார் தமிழ் ஆறு
10/06/17

## கோடைகாலம்

கோடைகாலம் இலைதுளிர் காலத்திற்கு பிறகு வரும். மரங்கள் பச்சை பசேலன இருக்கும். பறவைகள் மரத்தில் இருந்து அழகாக கூவுகின்றன. வண்ணவண்ண பூக்கள் காற்றில் ஆடுகின்றன. கதிரவனின் ஒளிக்கதிர்கள் தங்கம் போல மின்னுகின்றன. இதை பார்க்க மனதில் மகிழ்ச்சியாக இருக்கும்.

கோடைகாலம் ஆனி, ஆடி, ஆவணி மாசத்தில் வரும். கோடைகாலத்தில் வெப்பமாக இருக்கும். வண்டுகள் தேன் பருக மலர்களை தேடி செல்லும். பல வண்ணத்திப்பூச்சிகள் அழகாக பறக்கும். மலர்கள் வெள்ளை, மஞ்சல், சிவப்பு, செம்மஞ்சல், ரோஸா போன்ற நிறங்களாக இருக்கும். பூக்கள் நறுமணம் வீசும்.

கோடைகால நேரம் நீண்ட விடுமுறை வரும். இதனால் சிறுவர்கள் கடற்கரைக்குச் செல்வார்கள். கடற்கரையில் சிறுவர்கள் மணல் வீடு கட்டி விளையாடுவார்கள். கடலில் எல்லோரும் நீந்தி விளையாடுவார்கள். சிறுவர்கள் குளிர்களி குடிப்பார்கள். சிலர் பூங்காவுக்கு செல்வார்கள். அங்கு பட்டம் விடுவார்கள். நண்பர்களோடு பந்து அடித்து விளையாடுவார்கள். சிலர் நாயோடு விளையாடுவார்கள்.

கோடைகால நேரம் மக்கள் சுற்றுலா செல்வார்கள். பிரான்ஸ், இத்தாலி, நோர்வே போன்ற வெளிநாடுகளுக்கு செல்வார்கள். மக்கள் இலங்கைக்கும் செல்வார்கள். சிலர் நண்பர்கள் வீடு செல்வார்கள். கோடைகாலநேரம் தமிழ் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். ஓடுதல், கயிறு அடித்தல், பாயுதல் இருக்கும்.

கோடைகாலத்தில் பல கொண்டாட்டங்கள் வரும். நாட்கள் நீண்டதாக இருக்கும். அத்தோடு பகல் நேரம் நீண்டதாக இருக்கும். கோடைகாலத்திற்குப் பிறகு இலையுதிர் காலம் வரும். எல்லோருக்கும் கோடைகாலம் விருப்பம். ஏனென்றால் இது ஒரு மகிழ்ச்சி நிறைந்த காலம் ஆகும்.

Laxy Pradeepan
லக்ஷி பிரதீபன்
வளர்தமிழ் 6

# கோடைகாலம்

10/6/17

கோடைகாலம் வைகாசி முதல் ஆவணி வரையுள்ள மிகவும் உற்சாகமான காலமாகும். இக்காலத்தில் அதிகாலையில் கதிரவன் எழுவான். சூரியவெளிச்சத்தால் பகல் மிகவும் நீண்டதாகவும், வெப்பம் அதிகமாகவும் இருக்கும். இயற்கைக்கும், உயிரினங்களுக்கும், புத்துணர்ச்சியையும், உற்சாகமும் கொண்டு, இக்காலம் மிகவும் அற்புதமான காலமாகும்.

இக் காலத்தில் எங்கும் பச்சைப்பசேலென மரங்களும், புல்வெளிகளும், வண்ணவண்ணப் பூக்களும், பறவைகளின் ஆரவார ஒலிகளும், விலங்குகளின் துள்ளலும். மனிதர்களின் உற்சாகமும் என எங்கும் அழகும், இன்பமும் செழிப்பும் பொங்கிக் காணப்படும். இது இயற்கைக்காட்சி மிகவும் அழகாக இருக்கும் காலமாகும்.

இக்கோடையில் விடுமுறை வருவதால் மக்கள் சுற்றுலா சென்று மகிழ்வர். சிலர் வேறுநாடுகளுக்குச் சென்று கோடை விடுமுறையைக் கொண்டாடுவர். இக்காலத்தில் வெப்பம் அதிகமாக இருப்பதால் பலர் கடற்கரைக்குச் சென்று குளிப்பர். சிறுவர்கள் கடல்மண்ணில் மணல்வீடுகட்டி விளையாடுவர்.

இக்காலத்தில் கோவில் திருவிழாக்குச் சென்று மகிழலாம். மாலையில் பூங்காவிற்குச் சென்று விளையாடலாம். அங்கு விதவிதமான வண்ணங்களில் வண்ணத்துப்பூச்சிகளையும் காணலாம். கோடையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதால் அதில் பங்கெடுத்து மகிழலாம். இக்கோடைகாலம் இயற்கைக்கும், உயிரினங்களுக்கும் இன்பம் தரும் ஒரு வசந்தகாலமாகும்.

ஆபயிலஸ் வருணியா அருட்சந்திரன்

வளர் தமிழ் 5
10/06/2017

## தொலைத் தொடர்பு சாதனம்

இன்றைய நவீன உலகில் தொலைத் தொடர்பு சாதனம் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றன. எமது வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடைய தொடர்பாடல் முறையாக ஒன்றாகக் காணப்படுகின்றது. இன்று தொலைத் தொடர்பு சாதனங்களாக தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநகல், கணினி, மின்னஞ்சல், இணையம் என்பவற்றை கூறலாம். ஓரிடத்தில் நிகழும் நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள இவை உதவுகின்றன.

அதாவது, ஒரு நாட்டினது அரசியல் நிலைமைகள், காலநிலை மாற்றங்கள் தெரிந்து கொள்ள தொலைக்காட்சி, வானொலி உதவுகின்றன. அதுபோல, உறவினர், நண்பர்களுடன் சுகதுக்கங்கள் தெரிந்துகொள்வதற்கு தொலைபேசி, தொலைநகல் உதவுகின்றன. வேறுபட்ட இன, கலாச்சார, மொழி இணைக்கு ஊடகமாக இணையத்தளம் அமைகிறது. இன்று வெளிநாடுகளிலுள்ள உறவினர்களுடன் உரையாடி தகவல்களை தெரிந்துகொள்வதற்கு இணையத் தொலைபேசிகள் உதவுகின்றன.

தொலைத் தொடர்பு சாதனங்களில் நன்மைகள் இருப்பது போல தீமையான விடயங்களும் நிறைய உள்ளன. நாம் தேவையான விடயங்களை உள்ளெடுத்து தேவையற்ற விடயங்களைத் தவிர்த்து கொள்ளவேண்டும்.

Ahinth Vijayatharan
அகிந் விஜயதரன்
வகுப்பு 5

10/06/2017.

தொலைத்தொடர்பு

தொலைபேசி கிரகம் பெல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது (1900ம் ஆண்டில்). முற்காலத்தில் இருக்கிற மனிதர்களுடன் பேச , அவர்கள் ஒரு சிறு மடல் எழுதி புறாவின் காலில் கட்டி விடுவர். அந்தப் புறா அவர்கள் கூறுகின்ற இடத்தில் அந்த மடலைக் கொண்டு போய்ச் சேர்க்கும். இப்படிதான் முற்காலத்தில் தொலைத்தொடர்பு நிகழ்ந்தது.

இன்று நவீன காலத்தில் வீட்டில் இருக்கின்ற தொலைபேசி மூலம் உலகின் எந்தப்பகுதியில் இருப்பவர்களுடனும் பேச முடியும். முன்பு நண்பர்களைப் பார்ப்பதற்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று உரையாடி மகிழ்வர். இன்று கைத்தொலை மூலம் எங்கிருக்கும் நண்பர்களுடனும் உரையாடி மகிழலாம்.

தொலைதொடர்பு மனிதர்களுக்கிடையே நல்ல தொடர்புகளைப் பேணுவதற்கு உதவுகின்றது. அவர்களுடைய நன்மை தீமைகளில் பங்கு கொள்ள உதவுகின்றது. நன்மைகள் இருப்பது போல் தீமையும் உள்ளது. எனினும் நாம் நன்மைகளை எடுத்து தீமைகளைக் கைவிடுவதே சாலச் சிறந்தது.

சமனா
வகுப்பு 5

## தொலைத்தொடர்பு 10/06/17

தொலைத்தொடர்பு என்பது : ஒருவர் இன்னொருவருக்கு தகவல் அனுப்புவது. முன்னொரு காலத்தில் புறாக்கள் மூலம் செய்தி அனுப்பினர். அவர்களின் கால்கலில் செய்தியை கட்டிவிட்டு பறந்து செய்தியை கொடுக்க விடுவார்கள்.

தூரமான இடத்திற்கு கொடுக்க வேண்டிய தகவல்களை மனிதர்கள் மூலம் அனுப்பினர். அவர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஓடி சென்று கொடுத்தனர். இதன் ஞாபகத்திற்கு நாங்கள் ஒலிம்பிக் ஓட்டம், அஞ்சல் ஓட்டம் போன்ற பல போட்டிகளை நடித்தி வருகிறோம்.

இதற்கு பின்புதான் அஞ்சலை கண்டுபிடித்தனர். மாந்தனின் அறிவால்தான் 19ம் நூற்றாண்டில் தொலைவரியம் போல பல சாதனைகளை கண்டு பிடித்தோம். அதன் பின்பு தான் தொலைபேசி கண்டுபிடிக்கபட்டது.

எட்லின் அக்ஷரா பரமமனோகரன்
வளர் தமிழ் நடு (7)
10/06/17

## நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்

ஒரு மொழி செம்மொழியாகப் போற்றப்பட அம்மொழியில் உள்ள இலக்கிய இலக்கணச் செழுமையே காரணியாகும். சங்கத் தமிழ் நூல்கள், அறநெறி நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள் சான்றுகளாக வைத்திருக்கின்றோம். ஐம்பெருங்காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவையாகும். அவற்றுள் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் சிலப்பதிகாரம் மிகச்சிறந்தது ஆகும்.

சிலப்பதிகாரம் சிலம்பு - அதிகாரம் என்று இரு சொற்களில் அமைக்கப்பட்டது. சிலம்பு அதிகாரம் காரணமானதால் சிலப்பதிகாரம் ஆயிற்று. சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் மூன்றினையும் பற்றி கூறுகிறது. இதனாலேயே சிலப்பதிகாரம் 'முத்தமிழ்க் காப்பியம்' எனக் கூறப்படுகிறது. ஏனைய நூல்கள் அரசனை பாட்டுடைத் தலைவனாக கொண்டிருக்கிறது. ஆனால் சிலப்பதிகாரத்தில் கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாக கொண்டிருக்கிறது. இதனாலேயே சிலப்பதிகாரம் 'குடிமக்கள் காப்பியம்' என்றும் அழைக்கப்படும். சிலப்பதிகாரம் 'பாட்டிடையிட்ட தொடர்நிலைக் காப்பியம்' என்று கூறப்படும். சிலப்பதிகாரம் நாட்டுக் காப்பியம், நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், இறைநெறிப் பொதுமைக் காப்பியம் என்று பலவாறாக போற்றப்படும். இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இக்காப்பியத்தை எழுதியவர் இளங்கோ அடிகள் ஆவார். இளங்கோவடிகள் புகழ்பெற்ற மன்னன் சேரன் செங்குட்டுவனின் தம்பியாக அழைக்கப்பட்டார்.

இளங்கோ தனது அண்ணன் செங்குட்டுவனுடன் மலைவளம் காணச் சென்ற போது கண்ணகியைப் பற்றிய செய்தியைச் சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் மூலம் அறிந்தார், இளங்கோ.
கண்ணகியின் ஒழுக்கமும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் நேர்மையும் அரசியல் நடுநிலைமையும் அவரைக் கவர மூவேந்தர்களுக்கும் மிக முக்கியமான காப்பியம் என்று அறிந்தார்.

சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் மக்கள் கண்ணகி, கோவலன் மற்றும் ஆடல் மங்கை மாதவியும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் கடமைகளுள் ஒன்றாக இருக்கும் பண்பு விருந்தோம்பல் பற்றிக் கூறுகிறது. கோவலன் கண்ணகியை விட்டு மாதவியுடன் இருந்த காலத்தில் கண்ணகி விருந்தோம்பல் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று வருந்தினாள். இளங்கோ இதைப் பாட்டாக எழுதியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக சிலப்பதிகாரம் எமது அன்றைய கால வரலாற்றை விவரிக்கின்றது. இக்கதையில் இருக்கும் கண்ணகியின் ஒழுக்கத்தைக் காட்டுகிறது. எமக்கு மிகவும் நல்ல பண்புகளை கற்பிக்கும் 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' எல்லோராலும் போற்றப்படும் ஒன்றாகும்.

ரம்யா பிரதீபன்
ஆண்டு 8
10/06/2017

## தமிழ் இலக்கிய வளம்

தமிழ் மிகவும் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். உலகில் முதல்மொழி தமிழ்தான் என்பதை தேவநேயப்பாவாணர் நிறுவியுள்ளார். இவ்வாறு பெருமை வாய்ந்த தமிழை பல பெயர்களிட்டு அழைத்தனர். அதன் இனிமையால் தேன்தமிழ், தீந்தமிழ் எனவும், இளமையால் பைந்தமிழ் எனவும், செம்மையான மொழிவளத்தால் செந்தமிழ் எனவும், மேலும் முத்தமிழ் எனவும் குறிப்பிட்டனர்.

தமிழில் மட்டுமே இலக்கியங்களாலான இயல், பாடலால் ஆன இசை, இயலும், இசையும் கலந்த நடிப்பாலான நாடகம் என மூன்று பிரிவாகப்பிரிக்கப்பட்டு அதற்கு இலக்கணமும் அமைக்கப்பட்டுள்ளமை தனிச்சிறப்பானதாகும். மேலும் தமிழிலுள்ள சொற்கள் உருவம், பருவம் என இரண்டையும் ஒருங்கே காட்டும் சிறப்புத்தன்மை வாய்ந்தவை ஆகும். உதாரணமாக இலையின் பருவங்களான கொழுந்து, தளிர், இலை, பழுப்பு, சருகு என்பதைக் கூறலாம்.

தமிழ்மக்களில் புலமையிற் சிறந்தோர், உயர்ந்த கருத்துக்களை அழகுபடக் கூறும், பல சிறந்த இலக்கியங்களை படைத்தனர். தமிழர், உலகம்க்கள் அனைவரையும் தம் உறவினராகக் கொண்டனர் என்பதை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடல்வரிமூலம் கணியன் பூங்குன்றனார் உணர்த்தியுள்ளார்.

பண்டைக்காலத்திலே தமிழ்மொழியை வளர்ப்பதற்கு முதற்கழகம், இடைக்கழகம், கடைக்கழகம் என கழகங்கள் அமைத்து தமிழ் வளத்தை பெருக்கினர். முதல், இடைக் கழக நிலங்கள் அழிந்ததால் அக்கால நூல்கள் எமக்கு கிடைக்கவில்லை. அதில் "ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியம்" என்ற சிறப்புக்குரிய தொல்காப்பியர் எழுதிய பழைமையான இலக்கண நூலான தொல்காப்பியமே நமக்குக் கிடைத்த ஒரேயொரு நூலாகும். இன்று எமக்கு கிடைத்துள்ளவை

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களென்ற
முப்பத்தாறு நூல்களே ஆகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு பழங்கால
மன்னர்களின் வீரம், ஆட்சிச்சிறப்பு, கொடை, மக்கள்வாழ்க்கை,
பண்பாடு என்பவற்றை கூறுகின்றது. பதினெண்கீழ்க்கணக்கு
நூல்களில் ஒன்றான உலகப்பொதுமறையான திருக்குறள்
அறங்களை கூறுகிறது.

மேலும் தமிழில் ஐம்பெரும்காப்பியம், இணையற்ற இலக்கியங்களான
வைணவம் சார்ந்த திவ்யபிரபந்தம், சைவம் சார்ந்த தேவாரம், திருவாசகம்
கிறித்தவம் சார்ந்த இயேசுகாவியம், இசுலாமியம் சார்ந்த சீறாப்புராணம்
போன்றவை மற்றும் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியம் மேலும்,
நெடுங்கதை, சிறுகதை, நாடகம், புதுக்கவிதை போன்ற எண்ணற்ற
இலக்கியங்களும் இருப்பது தமிழுக்கு அழகு சேர்ப்பதாகும்.

தமிழ் வாழ்க!

ஜஸ்வின்திருலோகநாதன்
வளர் தமிழ் 8
10/06/17

## தமிழ் இலக்கிய வளம்

தமிழ் மிகத் தொன்மையான மொழியாகும். உலகில் தமிழ் முதல் மொழி என்று மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் நிறுவியுள்ளார். தமிழ் பல பிரிவுகளாக பிரக்கப்படும். அது பைந்தமிழ், செந்தமிழ், தேன்தமிழ் என்பன. பைந்தமிழ் தமிழின் இளமையைக் குறிக்கிறது. தேன்தமிழ் தமிழின் இனிமையைக் குறிக்கிறது. செந்தமிழ் தமிழின் செம்மையைக் குறிக்கிறது.

தமிழ் முத்தமிழ் என்று வழங்கப்படும். முத்தமிழ் என்றால் இயல், இசை, நாடகம். இயல் என்றால் உரை நடையால் ஆக்கப்பட்டுள்ள இலக்கியங்களைக் குறிக்கும். இசைத்தமிழ் என்பது இசைப்பாடல்களைக் குறிக்கும். நாடகத்தமிழ் இயலும் இசையும் கலந்த நடிப்பாலும் பேச்சாலும் கருத்துகளைப் புலப்படுத்துவது.

மிகப் பண்டைய நாட்களிலேயே தமிழ்மொழியை வளர்ப்பதற்காகக் கழகங்களை அமைத்தனர். அவை முதற்கழகம், இடைக்கழகம், கடைக்கழகம் என அழைக்கப்படுகின்றன. அக்கழகக் காலங்களில் எழுதப்பட்ட நூல்கள் எமக்கு கிடைக்கவில்லை. தொல்காப்பியம் மட்டுமே எமக்கு கிடைத்துள்ளது. 'ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம்' என்று இந்நூல் பாராட்டப் பெறுகிறது. இந்நூலை எழுதியவர் தொல்காப்பியர்.

எமக்குக் கிடைத்துள்ள கடைக்கழக நூல்களான, பத்துப்பாட்டு எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான முப்பத்தாறு நூல்கள் என்பன. இவற்றின் மூலம், பண்டைய காலத்து மன்னரின் வீரம், ஆட்சிச்சிறப்பு, கொடை, மக்களின் வாழ்க்கைநிலை, பண்பாடு போன்றவற்றை அறியலாம்.

இவை மட்டுமென்றி, இறையன்பு இலக்கியங்களும் தமிழில் உள்ளன. சைவநெறி சார்ந்த தேவாரம், திருவாசகம், திருவெம்பா முதலியனவும், வைணவநெறி சார்ந்த திவ்வியப் பிரபந்தம், கிறித்தவநெறி சார்ந்த தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், இயேசு காவியமும், இஸ்லாமிய நெறி சார்ந்த சீறாப்புராணம், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் முதலியனவும் தமிழுக்கு அழகு கூட்டுகின்றன. மேலும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்கள், நெடுங்கதை, நாடகம், புதுக்கவிதை என எண்ணற்ற இன்றைய இலக்கியங்களும், தமிழ் இலக்கியத்திற்கு வளம் செய்து வருவது பெருமை கொள்ளச் செய்கிறது.

## தமிழ் இலக்கிய வளம்

உலகத்தில் மிக தொன்மையான மொழிகளில் தமிழும் ஒன்று. எமது மொழி மிக அழகாக இருப்பதற்கு இலக்கிய இலக்கண வளங்களே காரணங்கள் ஆகும். இந்த இலக்கிய இலக்கண நூல்கள் மூவாயிரம் ஆண்டுகள் முன்பே எமக்கு கிடைத்தன; ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட நூல்கள் கடற்கோளினால் அழிந்தபடியால் எமக்கு கிடைக்கவில்லை.

தமிழில் ஒரு சொல் பெயரையும் பருவத்தையும் சுட்டிக்காட்டும். உதாரணத்திற்கு 'இலை' இலை என்ற சொல்லில் பல பருவங்கள் இருக்கின்றது.

எ.கா:

1. கொழுந்து
2. தளிர்
3. இலை
4. பழுப்பு
5. சருகு

தமிழில் உள்ள மிக சிறப்பு - முத்தமிழ். முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம். இயல் என்பது பாடலாகவும் உரைநடையாகவும் ஆக்கப்படும். இசை என்பது இசைப்பாடல்களைக் குறிக்கும். நாடகம் என்பது இயலும், இசையும் கலந்த நடிப்பாகும்.

தமிழில் எழுதப்பட்ட நூல்கள்: பத்துப்பாட்டு எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு. என்பன மிக சிறந்த நூல்கள். இவ் நூல்கள் பண்டை காலத்த மன்னரின் வீரம், ஆட்சிச்சிறப்பு, கொடை மக்களின் வாழ்வுநிலை எப்படி இருந்தது என்று சுட்டிக்காட்டும்.

அத்துடன் தமிழில் எழுதப்பட்ட

ஐம்பெரும்காப்பியங்களும் சிறந்தவை.
இவை:

1. குண்டலகேசி - நாதகுத்தனார்
2. சிலப்பதிகாரம் - திருத்தக்கதேவர்
3. வளையாபதி - ?
4. சீவகசிந்தாமணி - இளங்கோவடிகள்
5. மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்.

மெஜ

மெனுஜா பிரபாகரன்
ஆண்டு எட்டு

லெஸ்லின் லவனியா அருட்சந்திரன்
வளர்தமிழ் 9
10/06/2017

காடுகள்

காடுகள் என்பது இயற்கையால் எமக்கு தந்த கொடை ஆகும். அவை ஒரு நாட்டின் செல்வங்கள் ஆகும். இந்த இயற்கை கொடைகள் எம்மால் பாதுகாக்க பட வேண்டியவை. காடுகள் மனிதனிற்கு பல நன்மைகளை கொடுகின்றது.

காடுகள் இருக்கின்ற மரங்களை மனிதன் பயன்படுத்துகிறான். நாம் மரப்பலகைகளை பாவித்து மரதளபாடங்களை அமைக்கின்றோம். அத்துடன் மரப்பலகைகளை பாவித்து நாம் வீடுகளை கட்டுகின்றோம். குளிர் நாடுகளான, கனடா போல், சூட்டை பிடிக்கும் ஒரு பொருளாய் இருப்பதால், மரப்பலகைகளை வீடுகள் கட்ட பயன்படுத்துகிறார்கள். மரத்தை பயன்படுத்தி சிற்பங்களும் செய்வார்கள்

அத்தோடு, காடுகள் மண்ணரிப்பை குறைப்பதால் மண்வளம் பேணிபாதுகாக்கப் படுகிறது. இவை எம் நாடுகளுக்கு மழையையும் கொடுக்கும் ஒரு கொடையாய் இருக்கிறது. காடுகள் அவர்களுக்கென மழையை உருவாக்குகின்றன. நாம் வாழ்வதற்கு அவசியமான ஒக்சிசனை வெளியேற்றுகிறார்கள். இது சூழலின் மாசடையையும் குறைக்கின்றது.

விலங்குகளிற்கும் பறவைகளிற்கும் காடுகள் பல பயன்கள் கொடுகிறது. விலங்குகள், பறவைகள் காடுகளில் இருக்கும் காய்கனிகள் உணவாகவும், அங்கு இருக்கும் பெரிய மரங்கள் பாதுகாப்பாகவும் இருக்கின்றன. இதைவிட காடுகளில் நாம் பல மூலிகை செடிகளும் மருத்துவ பொருட்களுக்காக பாவிக்க படுகிறது.

காடுகள் எமக்கு பல நன்மைகளை தருகிறது. அதனால் நாம் காடுகளை பாதுகாக்க வேண்டும். நாம் மரங்களை வெட்டிவிடக் கூடாது. நாம் மரங்களை வெட்டினால் நாம் விலங்குகளின் வாழும் இடங்களை

அழித்து விடுவோம். போன வருடம் மாவீரத் தினத்திற்கு ஒவ்வொரு மாவீரனிற்கு ஒரு மரம் நட்டார்கள். நாம் விலங்குகளின் உணவு சங்கிலியை குழப்பிவிட்டால், சில விலங்குகள் சாகவும் கூடும்.

எனவே நாம் அனைவரும் இயற்கை எமக்கு தந்த கொடையான காடுகளை பாதுகாப்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

மோகனராசா பிரகாஷ்
வளர்தமிழ் 11

## கடல்கொண்ட தமிழகம்

இன்று இந்துமாவாரியாக உள்ள இடம், நிலப்பரப்பாக இருந்தபொழுது, தமிழர்களை வாழவைத்து, அவர்களின் பிறப்பிடமாக இருந்துவிய இந்த நிலப்பரப்பு, கடலால் மூழ்கப்பட்டு, தெற்கே அவுஸ்திரேலியாவையும், மேற்கே ஆபிரிக்காவையும், வடக்கே அன்றைய நாவலந்தீவு, இன்றைய இந்தியாவையும் உருவமைத்த கணையின முக்கிய பகுதியாக இருந்த நிலப்பரப்பாகும். இந்நிலப்பரப்புக்கு 'குமரிக்கண்டம்' என்று கழகத் தமிழிலக்கியங்களான சிலப்பதிகாரத்திலும், இறையனார் அகப்பொருளிலும், கலித்தொகையிலும், தொல்காப்பியத்திலும் பெயரிடப்பட்டது. இக்கண்டத்தின் அழகையும், இக்கண்டத்தில் தோன்றிய தமிழ் மொழியின் இனிமையையும், இக்கண்டத்தில் வாழ்ந்து வந்த தமிழ் மொழி பேசும் மக்களின் வரலாற்றுச் சிறப்புகளையும் இக்கட்டுரை விளக்கும்.

'குமரிக்கண்டம்' என்று இனிய பெயரால் அழைக்கப்படும் இந்தத் தமிழ்க்கண்டம், ஆய்வாளர்களால் "இலெமூரியா" என்று அழைக்கப்படுகிறது. அக்கண்டத்தில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களை "இலெமூர்கள்" என அழைக்கின்றனர் ஆய்வாளர்கள். அன்றைய மாந்தன், தமிழ்மொழியைப் பேசக் கற்றுக்கொள்வதற்குமுன், குரங்கைப் போல், மயிரால் அடர்ந்த உடலோடும், குனிந்த நடையோடும் நடந்து சென்ற காரணத்தினால், ஆய்வாளர்கள் அவனை இலெமூர் என்று அழைத்தனர். இவ்விலங்கின மாந்தன் பல்லாயிரம் ஆண்டுகால வளர்ச்சியில், நிமிர்ந்து, கால்களால் நடக்கக் கற்று, ஒலிகளின் மூலமாக தன் எண்ணங்களை வெளிப்படுத்தவும், வேறு விலங்குகள் கூறும் ஒலிகளை வைத்து, வேறு மாந்தர்களுக்கு விளங்கும்படி, ஒலிகளைக் கூறிப் பேசக் கற்றுக்கொண்டுள்ளான். இவ்வகையிலேயே எம்மைப் போல் பேசத் தெரிந்த மாந்தனுக்கு கிறித்தவ இலக்கியமான "பரிசுத்த வேதாகமம்" என்ற நூலில் குறிக்கப்பட்ட "ஆடம்" என்ற பெயரைக் கொடுத்துள்ளனர் ஆய்வாளர்கள். அந்நூலில் கூறப்படும் "ஈடன்" என்ற நிலப்பரப்பு குமரிக்கண்டமே என்று இன்றைய

ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். எனவே, தேவநேயப் பாவாணர் கூறியதுபோல, தமிழ்மொழியே உலகின் முதல் மொழி என்றும், இம்மொழி குமரிக்கண்டத்திலேயே பிறந்தது என்றும் பல சான்றுகளின் அங்கமாக நிறுவப்படுகிறது.

எனினும், மும்முறை கடற்கோளால் உடைந்து சிதறிய குமரிக்கண்டம், முதன்முறை அவுஸ்திரேலியாவையும் ஆபிரிக்காவையும் இணைத்து, சில தென்கிழக்காசிய நாடுகளை உருவமைத்து, இரண்டாம் முறை மாலைதீவையும், மொரிசியசில் உள்ள தீவுகளையும் உருவமைத்து, மூன்றாம் முறை இலங்கைத் தீவையும் உருவமைத்தது. அன்று, ஓர் பெருநிலப்பரப்பையே ஆண்ட தமிழன், இன்று தனக்கென ஓர் நாடின்றி வாழ்கின்றான் என்ற உண்மையை மீண்டும் மீண்டும் நினைத்து, பல மனதுகள் துக்கப்படும் காலம் இது. கடலால் கொண்ட தமிழகம், இன்று இல்லாவிட்டால் நாளையாவது மீண்டும் கிடைக்கும், என்ற நம்பிக்கை எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்துள்ளது. இவ்வகையில் எமக்கு வாழ்க்கையைக் கொடுத்த குமரிக்கண்டம் பிரியமுன், அதன் மேற்கிலேயே ஒரு பண்மலைத்தொடர் இருந்தது. குமரிமலை என்றழைக்கப்படும் மாபெரும் மலையில் தென்சரிவிலே பஃறுளி ஆறும், வடக்கிலே குமரிப் பேராறும் கிழக்குமுகமாகப் பாய்ந்தன என்று தேவநேயப் பாவாணர் நிறுவியுள்ளார். இந்நாடு முழுவதும் தமிழர்களது நாடாக இருந்தது. அன்று பாய்ந்த குமரியாற்றின் தெற்கே இருந்த நாடு பாண்டிய நாடாகவும், வடக்கே இருந்த நாடு பனிமலைவரையும் மேற்பகுதி சேர நாடாகவும், கீழில் உள்ள நாடு சோழநாடாகவும் இருந்தது. மூன்றாம் கடற்கோளின்போது, நாவலந்தீவின் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில இருந்த நாற்பத்தொன்பது நாடுகள் கடற்கோளால் அழிந்த செய்தி நோவாவின் கதையில் நுணுக்கிக் கூறப்பட்டது.

இவ்வகையிலேயே, பல சான்றுகளின் மூலம், உலகின் முதல் மொழி தமிழ் என்றும், உலகின் முதல் மாந்தன் தமிழன் என்றும், அவன் குமரிக்கண்டத்தில் தோன்றி உலகமெங்கும் வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்றும் அறிஞர்களால் நிறுவப்படுகிறது. அவர்களின் ஆய்வுகளின் மூலம், ஈழமக்கள் குமரிக்கண்ட மாந்தனின் வழித்தோன்றல்கள் என்றும் அறியலாம். ஈழமக்களாகிய எங்களது பண்பாட்டு விழுமியங்கள் அன்றைய மாந்தனின் வாழ்வியல் எச்சங்களாக இருக்கின்றன. எனவே, ஈழத்தமிழர்கள் வாழும் வரை குமரிக்கண்டத் தமிழ்மொழி வாழும்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்மொழி!

# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY

59 Cranley Road, Ilford, Essex. IG2 6AF

Tel: +44[0]20 8518 3288, Mob: +44[0]7950 346432, Email: info@henshou.com, Web: henshou.com

Affiliated to

ISSHINRYU WORLD KARATE ASSOCIATION. Okinawa, JAPAN.

OKINAWA ISSHINRYU KARATE KOBUDU ASSOCIATION. Hudson, USA.

ALL INDIA ISSHINRYU KARATE AND KOBUDU ASSOCIATION.Chennai, INDIA.





Classes are Now Running Wednesday 6.30pm to 9.00pm in Walthamstow
at: William Morris Community Centre, 6-8 Greenleaf Road, Walthamstow, London, E17 6QQ.

Designed by Amalan, Printed @ JR Print | Tel: 020 8503 6643